செ.வெ.எண்-19 நாள்-12.02.2018

**அரியலூர் மாவட்டத்தில் திருமழபாடியில் நேரடி நெல்கொள் முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்கள்.**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் திருமழபாடியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (12.02.2018) திறந்து வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், சின்னதுரை, த/பெ.சின்னப்பா என்ற விவசாயின் நெல்கொள்முதலை தொடங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் 19 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் இன்று 7 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் நான் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி, கட்டிடங்கள் திறந்து வைத்திருந்தாலும், அதனைவிட விவசாயிகளுக்கு மிகவும் பயன்படக் கூடிய இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை திறந்து வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியுடன் பெருமையடைகிறேன்.

விவசாய பெருமக்கள் தங்கள் விலை நிலத்தின் விளைந்த நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்று அரசு நிர்ணயம் செய்த தொகையினை தங்கள் வங்கி கணக்கில் நேரடியாக பெற்று பயனடையலாம்.

நெல்கொள்முதல் நிலையத்தில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் உடனடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் அல்லது மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்குமாறும், இந்நெல்கொள்முதல் நிலையத்தை விவசாயிகள் பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) சு.அய்யாசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் எஸ்.உமாமகேஸ்வரி, மண்டல துணை மேலாளர் பி.முத்தையா, உதவி மேலாளர் (தரக்கட்டுப்பாடு) சி.கலைமணி, கண்காணிப்பாளர் பி.தங்கையன், உதவி இயக்குநர் (வேளாண்மை) (பொ) சாந்தி, வேளாண் அலுவலர் வடிவேல், விவசாய சங்கத்தலைவர் செங்கமுத்து, திருமழப்பாடி முன்னாள் ஊராட்சிமன்றத்தலைவர், பெருந்தலைவர் குமார் மற்றும் அலுவலர்கள், விவசாயி சங்க பிரதிநிதிகள் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**